ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 9.9 – மல்லிகை கமழ்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 9.9 – மல்லிகை கமழ்

‡ மல்லிகை கமழ் தென்றல் ஈரும் ஆலோ ! ⋆
வண் குறிஞ்சி இசை தவரும் ஆலோ ! ⋆
செல் கதிர் மாலையும் மயக்கும் ஆலோ ! ⋆
செக்கர் நன்மேகங்கள் சிதைக்கும் ஆலோ ! ⋆
அல்லியந் தாமரைக் கண்ணன் எம்மான் ! ⋆
ஆயர்கள் ஏறரியேறெம் மாயோன் ⋆
புல்லிய முலைகளும் தோளும் கொண்டு ⋆
புகல் இடம் அறிகிலம் தமியம் ஆலோ ! ॥ **9.9.1** ॥

புகல் இடம் அறிகிலம் தமியம் ஆலோ ! ⋆
புலம்புறு மணி தென்றல் ஆம்பல் ஆலோ ! ⋆
பகல் அடு மாலை வண் சாந்தம் ஆலோ ! ⋆
பஞ்சமம் முல்லை தண் வாடை ஆலோ ! ⋆
அகல் இடம் படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து ⋆
எங்கும் அளிக்கின்ற ஆயன் மாயோன் ⋆
இகல் இடத்தசுரர்கள் கூற்றம் வாரான் ⋆
இனி இருந்தென் உயிர் காக்கும் ஆறென் ॥ **9.9.2** ॥

இனி இருந்தென் உயிர் காக்கும் ஆறென் ⋆
இணை முலை நமுக நுண் இடை நுடங்க ⋆
துனி இரும் கலவி செய்தாகம் தோய்ந்து ⋆
துறந்தெம்மை இட்டகல் கண்ணன் கள்வன் ⋆
தனி இளம் சிங்கம் எம் மாயன் வாரான் ⋆

தாமரைக் கண்ணும் செவ்வாயும் ⋆
நீலப் பனி இரும் குழல்களும் நான்கு தோளும் ⋆
பாவியேன் மனத்தே நின்றீரும் ஆலோ ! ॥ **9.9.3** ॥

பாவியேன் மனத்தே நின்றீரும் ஆலோ ! ⋆
வாடை தண் வாடை வெவ்வாடை ஆலோ ! ⋆
மேவு தண் மதியம் வெம் மதியம் ஆலோ ! ⋆
மென் மலர்ப் பள்ளி வெம் பள்ளி ஆலோ ! ⋆
தூவியம் புள் உடைத் தெய்வ வண்டு துதைந்த ⋆
எம் பெண்மையம் பூவிதாலோ ! ⋆
ஆவியின் பரமல்ல வகைகள் ஆலோ ! ⋆
யாமுடை நெஞ்சமும் துணை அன்றாலோ ! ॥ **9.9.4** ॥

யாமுடை நெஞ்சமும் துணை அன்றாலோ ! ⋆
ஆ புகுமாலையும் ஆகின்றாலோ ! ⋆
யாமுடை ஆயன் தன் மனம் கல் ஆலோ ! ⋆
அவனுடைத் தீங்குழல் ஈரும் ஆலோ ! ⋆
யாமுடைத் துணை என்னும் தோழிமாரும் ⋆
எம்மின் முன் அவனுக்கு மாய்வர் ஆலோ ! ⋆
யாமுடை ஆர் உயிர் காக்கும் ஆறென் ⋆
அவனுடை அருள் பெறும் போதரிதே ! ॥ **9.9.5** ॥

அவனுடை அருள் பெறும் போதரிதால் ⋆
அவ்வருள் அல்லன அருளும் அல்ல ⋆
அவன் அருள் பெறும் அளவாவி நில்லாது ⋆
அடு பகல் மாலையும் நெஞ்சும் காணேன் ⋆
சிவனொடு பிரமன் வண் திருமடந்தை ⋆
சேர் திருவாகம் எம் ஆவி ஈரும் ⋆

எவம் இனிப் புகும் இடம் எவன் செய்கேனோ ⋆
ஆருக்கென் சொல்லுகேன் அன்னைமீர்காள் ! ‖ **9.9.6** ‖

ஆருக்கென் சொல்லுகேன் அன்னைமீர்காள் ! ⋆
ஆர் உயிர் அளவன்றிக்கூர் தண் வாடை ⋆
கார் ஒக்கும் மேனி நம் கண்ணன் கள்வம் ⋆
கவர்ந்த அத்தனி நெஞ்சம் அவங்கண் அஃதே ⋆
சீர் உற்ற அகில் புகையாழ் நரம்பு ⋆
பஞ்சமம் தண் பசும் சாந்தணைந்து ⋆
போர் உற்ற வாடை தண் மல்லிகைப் பூப் ⋆
புது மணம் முகந்து கொண்டெறியும் ஆலோ ! ‖ **9.9.7** ‖

புது மணம் முகந்து கொண்டெறியும் ஆலோ ! ⋆
பொங்கிள வாடை புன் செக்கர் ஆலோ ! ⋆
அது மணந்தகன்ற நம் கண்ணன் கள்வம் ⋆
கண்ணனில் கொடிதினியதனில் உம்பர் ⋆
மது மண மல்லிகை மந்தக் கோவை ⋆
வண் பசும் சாந்தினில் பஞ்சமம் வைத்து ⋆
அது மணந்தின் அருள் ஆய்ச்சியர்க்கே ⋆
ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான் ‖ **9.9.8** ‖

ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான் ⋆
அது மொழிந்திடை இடைத்தன் செய் கோலத் ⋆
தூது செய் கண்கள் கொண்டொன்று பேசித் ⋆
தூ மொழி இசைகள் கொண்டொன்று நோக்கி ⋆
பேதுறு முகம் செய்து நொந்து நொந்து ⋆
பேதை நெஞ்சறவறப் பாடும் பாட்டை ⋆

யாதும் ஒன்றறிகிலம் அம்ம அம்ம ! ⋆
மாலையும் வந்தது மாயன் வாரான் ॥ **9.9.9** ॥

மாலையும் வந்தது மாயன் வாரான் ⋆
மா மணி புலம்ப வல்லேறணைந்த ⋆
கோல நன்னாகுகள் உகளும் ஆலோ ! ⋆
கொடியென குழல்களும் குழறும் ஆலோ ! ⋆
வால் ஒளி வளர் முல்லை கருமுகைகள் ⋆
மல்லிகை அலம்பி வண்டாலும் ஆலோ ! ⋆
வேலையும் விசும்பில் விண்டலறும் ஆலோ ! ⋆
என் சொல்லி உய்வன் இங்கவனை விட்டே ॥ **9.9.10** ॥

‡ அவனை விட்டகன்றுயிர் ஆற்றகில்லா ⋆
அணி இழை ஆய்ச்சியர் மாலைப் பூசல் ⋆
அவனை விட்டகல்வதற்கே இரங்கி ⋆
அணி குருகூர்ச் சடகோபன் மாறன் ⋆
அவனி உண்டுமிழ்ந்தவன் மேல் உரைத்த ⋆
ஆயிரத்துள் இவை பத்தும் கொண்டு ⋆
அவனியுள் அலற்றி நின்றுய்ம்மின் தொண்டீர் ! ⋆
அச்சொன்ன மாலை நண்ணித் தொழுதே ॥ **9.9.11** ॥

அடிவரவு — மல்லிகை புகலிடம் இனி பாவியேன் யாமுடை அவனுடைய ஆருக்கு புதுமணம் ஊதும் மாலையும் அவனை மாலை

மல்லிகை கமழ் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்